நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 733/2025

## P.W.3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | அருண்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | மாரிமுத்து |
| கிராமம் | : | மாமரத்துமேடு |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW3 |
| வயது | : | 27 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம்,ஏப்ரல் மாதம், 15–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர். ( கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் இன்று ஆஜரில் இல்லாததாலும் சாட்சி மற்றும் தரப்பினர்கள் ஆஜரில் இருப்பதை கருத்தில் கொண்டும் மேற்படி சாட்சியை விசாரணை செய்யாமல் திருப்பி அனுப்புவது வழக்கு விசாரணையில் தொய்வு ஏற்படுத்தும் என்பதாலும் நீதியின் நலன் கருதி இந்நீதிமன்றம் தாமாக சாட்சியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்கிறது.)**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.55 AM

1. நான் தற்போது மாமரத்துமேடு நங்கவள்ளியில் குடியிருந்து IT நிறுவனத்தில் வேலை செய்கிறேன். சுமார் 5 மாதத்திற்கு முன்பு ஒருநாள் மதியம் நான் எனது வீட்டின் முன்பாக இருந்தபோது போலீசார் வந்து ஒரு விபத்து வழக்கு சம்மந்தமாக விசாரிப்பதாக சொல்லி எனது பெயர் மற்றும் முகவரியை வாங்கிக்கொண்டு கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டேன்.

2. விபத்து எவ்வாறு நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. வழக்கின் மற்ற விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டபடும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். (**பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து மட்டும் அ.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) என்னுடன் இருந்த எனது மாமா பாலுசாமி என்பவரும் அப்போது கையெழுத்து போட்டார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை அவசியம் இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 12.00 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**

**நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 733/2025

## P.W.4 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாலுசாமி |
| தந்தை / கணவர் பெயர் | : | ராசமுத்து |
| கிராமம் | : | மாமரத்துமேடு |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW4 |
| வயது | : | 40 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம்,ஏப்ரல் மாதம், 15–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர். ( கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் இன்று ஆஜரில் இல்லாததாலும் சாட்சி மற்றும் தரப்பினர்கள் ஆஜரில் இருப்பதை கருத்தில் கொண்டும் மேற்படி சாட்சியை விசாரணை செய்யாமல் திருப்பி அனுப்புவது வழக்கு விசாரணையில் தொய்வு ஏற்படுத்தும் என்பதாலும் நீதியின் நலன் கருதி இந்நீதிமன்றம் தாமாக சாட்சியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்கிறது.)**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.01 PM

1. நான் தற்போது மாமரத்துமேடு நங்கவள்ளியில் குடியிருந்து பிளம்பராக வேலை செய்கிறேன். சுமார் 5 மாதத்திற்கு முன்பு ஒருநாள் நான் எனது வீட்டில் இருந்தபோது அதற்கு முன்பாக 1 மாதத்திற்கு முன்பு நடைபெற்ற விபத்து சம்மந்தமாக போலீசார் வந்து என்னை விசாரித்தார்கள். எனக்கு விபத்து பற்றி எதுவும் தெரியாது என்று சொன்னேன். அதுசம்மந்தமாக பெயர் மற்றும் முகவரியை வாங்கிக்கொண்டு கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டேன். என்னுடன் வேறுயாரும் கையெழுத்து போடவில்லை.

2. விபத்து எவ்வாறு நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. வழக்கின் மற்ற விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டபடும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். **(பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து மட்டும் அ.சா.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை அவசியம் இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.05 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**

**நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்**